In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாரியாரை கவர்ந்தவர்கள்



மணவை பொன்.மாணிக்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாரியாரை கவர்ந்தவர்கள்

மணவை பொன். மாணிக்கம்

கற்பகம் புத்தகாலயம்

4/2, சுந்தரம் தெரு, (நடேசன் பூங்கா அருகில்)
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 2431 4347
Email : info@karpagamputhakalayam.com
Website : www.karpagamputhakalayam.com

In Public Domain. Digitized by eGangotri & Tamil Virtual Academy

நூல் விவரப் பக்கம்

நூலின் பெயர்	:	வாரியாரை கவர்ந்தவர்கள்
ஆசிரியர்	:	மணவை பொன். மாணிக்கம்
மொழி	:	தமிழ்
நூல் வகை	:	கட்டுரைகள்
உரிமை	:	ஆசிரியருக்கு
பதிப்பு ஆண்டு	:	நவம்பர் - 2016
பக்கங்கள்	:	64
நூல் அளவு	:	18.5 x 12.5 செ.மீ.
எழுத்து	:	11 புள்ளிகள்
தாள்	:	11.6 கி.கி. தாள்
பைண்டிங்	:	கார்டுபோர்டு
நூல் வெளியீடு	:	கற்பகம் புத்தகாலயம் 4/2, சுந்தரம் தெரு, (நடேசன் பூங்கா அருகில்) தி. நகர், சென்னை - 600 017. ✆ : 24314347
ஒளி அச்சு	:	விக்னேஷ்வர் கிராபிக்ஸ் திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. ✆ : 9362330550
அச்சிட்டோர்	:	சுப்ரா பிரிண்ட்டெக் சேப்பாக்கம், சென்னை - 600 005.

விலை : ரூ. 25.00

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவருக்கும் என் ராசி...

பல்கலைவேந்தன்

திரு. கே. பாக்யராஜ்

சிலருக்கு பிறப்பிலேயே ஒரு ராசி இருக்கும் என்றால், சிலருக்கு பெற்றோர் வைக்கும் பெயரிலேயே அந்த ராசி வந்து விடும். ''உனக்கு அந்தப் பெயர் ராசி உண்டு' என்று சில பெரியோர்கள் என்னிடம் கூறியதுண்டு.

அதே மாணிக்கமான ராசிக்காரர்தான் என் மரியாதைக்குரிய நண்பரும், இந்நூலாசிரியருமான திரு. மணவை பொன் மாணிக்கம் அவர்கள்,

மரியாதைக்குரிய திரு. வாரியார் அவர்கள் புராணங்களில் ஆங்காங்கே தேடிக் கண்டுபிடித்த மாணிக்கங்களை, நமது மாணிக்கம் அவர்கள், நல்மாணிக்கமாக ஒரே புத்தகத்தில் பத்திரப்படுத்தி, மக்கள் பெற்று மனம் மகிழச் செய்து விட்டார்.

நம் வாழ்க்கைக்கு தேவையான, உபயோகமான அன்பு, பண்பு, பந்தம், பாசம், குடும்பம், கற்பு, நட்பு, நன்றி இப்படிப்பட்ட பல நல்ல குணங்களை உணர்த்தும் உயரிய கதாபாத்திரங்கள் கண்ணன், கர்ணன், இராமன், இலக்குவன், அனுமன், குகன், கும்பகர்ணன், சீதை ஆகியோர் ஆவர்.

எடுத்தால் படித்து முடித்தபிறகே புத்தகத்தை மூட மனம் வரும் அளவுக்கு, திரு. வாரியார் சொன்ன கருத்துப் பெட்டகத்தை, பயனுள்ள முறையில், தொகுத்த நண்பர் மணவை பொன் மாணிக்கம் மேலும் இத்தகைய சீரிய பல நற்பணிகளைத் தொடர வேண்டி அன்புடன் வாழ்த்துகிறேன்.

அன்புடன்

கே. பாக்யராஜ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமர்ப்பணம்

திருமிகு. பொன்னன் திருமதி.லட்சுமி

○ எதை
எதையோ
எதிர்பார்த்து
எதிர்பார்த்து...

○ இறுதியில்
நலம் விசாரிக்கும்
கடிதம் மட்டுமே
எதிர்பார்த்து...

○ இறுதி மூச்சு விட்ட
என் தாய் தந்தையர்க்கு...

-மணவை பொன்.மாணிக்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

TRS. ரமணி ஐயர், M.A.,
ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலயம்,
கேராச்சர்மா - தென்அந்தமான் - 744 105.

வாழ்த்துரை

கடவுளால் படைக்கப் பெற்ற எல்லா உயிர்களிடத்தும் ஏதேனும் ஒரு சிறப்பு இருக்கும், ஆகவே எதையும் எளிமையாக ஒதுக்கி விட முடியாது என்ற உயரிய கருத்தையும், யாரொரு மனிதராக இருந்தாலும் அவர்களோடு பழகும்போது, அவர்களிடம் உள்ள நல்ல குணங்களை மட்டுமே பார்த்து எடுத்துக் கொண்டு பழகினோமேயானால், அவர்களை எள்ளி நகையாடவோ எதிர்த்து நிற்கும் பகைவராகவோ வாய்ப்பு இருக்காது என்ற வாழ்க்கையின் நடைமுறைத் தத்துவத்தை புரிந்து கொள்வதற்காகவே,

திருவாளர் மணவை பொன் மாணிக்கம் அவர்கள் 'திருமுருக கிருபானந்த வாரியார் ரசித்த புராணக் கதாபாத்திரங்கள்' என்ற நூல் எழுதி என்னை ரசிக்க வைத்திருக்கிறார். நீங்களும் ரசிப்போடு நிறுத்தி விடாமல் மணவை பொன் மாணிக்கத்தின் நோக்கம் நிறை வேறும்படி வாழ்ந்து பாருங்கள். ''கற்றபின் நிற்கத் தகுந்த நூல்''.

அன்புடன்

அந்தமான் TRS. ரமணி ஐயர், M.A.,
திரைப்பட இயக்குநர் - பாடலாசிரியர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளுடன் நூலாசிரியர்

என்னுரை

உலகில் ஒரு மகான் தோன்றி மறைகிறபொழுது, அவருக்குப் பின்னாலே, அவரைப் போலவே இன்னொருவர் வாரிசாக வந்து விடுவார். எனவே அந்த மகானின் இடம் நிரப்பப்பட்டு விடும்.

ஆனால் ஆன்மீகச் செம்மல் திருமுருக கிருபானந்த வாரியார் அமரராகி விட்ட பிறகு, அவரின் இடத்தை நிரப்ப இன்னமும் ஒருவர் தோன்றவில்லை. அந்த அளவுக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லா அளவுக்கு தன்னுடைய தள்ளாத வயதில்கூட, தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் தொண்டாற்றித் தூயவராக வாழ்ந்தவர்.

அள்ள அள்ளக் குறையாத ஞானவள்ளல் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்களை 1990, ஜூன், ஜூலை மாதங்களில் 'பாக்யா' வார இதழுக்காக சந்தித்தேன். அப்பொழுது அந்த ஞான வள்ளலிடம் பகிர்ந்து கொண்டதை பதிவு செய்து மகிழ்கிறேன்.

மனநிறைவுடன்.

மணவை பொன் மாணிக்கம்

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri. Digitization Muthulakshmi Research Academy

1

குகன்

ராமனை அண்டிச் சரணடைந்தவர்கள் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு பிரதிபலனைப் பெற்றிருக்கிறார்கள். சுக்ரீவன் ராமனை வணங்கி ராஜ்யத்தைப் பெற்றான். விபீஷணன் ராமனைத் தஞ்சம் அடைந்து இலங்கையைப் பெற்றான். ஆஞ்சநேயன் ராமனைத் தஞ்சமடைந்து ராமனையேப் பெற்றான். ஆனால் எந்தவிதமான

In Public domain. Digitization - Muthulakshmi Research Academy

பிரதிபலனும் எதிர்பார்க்காமல் ராமனிடம் தஞ்சம் அடைந்தவன் குகன். அடி, உதை, குத்து, வெட்டு இப்படிக் கொடுமைகள் நிறைந்த குலத்தில் அவதரித்தவன் குகன்.

கொலையே புரி
வேடர் குலம்

–என்று அருணகிரியார் பாடுவார். இப்படி அவன் முரட்டுக் குலத்திலே பிறந்திருந்தாலும் பரம சாதுவாகி பகவான் ராமனிடத்திலே தாயினும் மேலாக அன்பு செலுத்தினான். அதனால் ராமன், குகனைத் தம்பி என்று அரவணைத்துக் கொண்டான். குகனோ வேடக்கோல் பிடிக்கிறவன். ராமனோ செங்கோல் பிடிக்கிறவன். குகன் பல நாளைக்கு ஒரு முறை குளிக்கிறவன். ராமன் தினம் மூணு வேளை குளிக்கிறவன். ராமன் எல்லா நூல்களையும் கற்றவன். குகன் கல்வியறிவே இல்லாதவன். இப்படி எத்தனை ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும், குகனைத் தம்பியாக ஏற்றுக் கொண்டு உயிரினும் மேலாக நேசித்தான். அதனால்தான் சீதா தேவியே,

ஆழிநீர் கங்கை அன்புகடவிய
ஏழை வேடனை எம்பினில்– தம்பிநீ
தோழன் நங்கை கொழுந்தி.

–எனப் போற்றிப் பாடுகிறார். உடன் பிறந்த சகோதரனுக்கு உதவி செய்வதைக்கூட தடுத்து, குடும்பத்தையேத் துண்டாடும் சில பெண்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இங்கே ஊர் பேர் தெரியாத ஒருவனை ராமன் தன் தம்பி என்று சொன்னதில்கூட பெருமையில்லை. வேடர் குலத்தைச் சேர்ந்த குகனை ஜானகி தன் கொழுந்தன் என்று ஏற்றுக் கொண்டு அழைத்ததுதான் பெருமை. எனவே இராமாயணத்தின் காப்பிய நாயகியே, பாராட்டிப் போற்றப்படுகிற குகனே என்னை அதிகம் கவர்ந்தவன்.

In Public Domain. Digitization Muthulakshmi Research Academy

2

கும்பகர்ணன்

பொதுவா ஒருத்தன் நல்லாச் சாப்பிட்டு, தூங்கிக் கிட்டே இருந்தா அவனை சோம்பேறி, உதவாக்கரை அப்படீன்னுதான் சொல்லுவோம்.

காவியங்களில் வருகிற சில கதாபாத்திரங்களில், பெயர் களை நினைத்தாலே அவர்களுடைய பண்புதான்

In Partnership with Digitization Muthulakshmi Research Academy

நம் கண் முன் வந்து நிற்கும். உதாரணத்துக்கு, அரிச்சந் திரனை நினைத்தால், உண்மை நினைவுக்கு வரும். தருமனை நினைத்தால், பொறுமை நினைவுக்கு வரும். கர்ணனை நினைத்தால், கொடைப்பண்பு நினைவுக்கு வரும். அதே போல், கும்பகர்ணனை நினைத்தாலே எல்லோருக்கும் அவன் ஒரு தூங்குமூஞ்சி என்றுதான் நினைவுக்கு வரும்.

ஆனால், கும்பகர்ணனின் மறுபக்கம், ஓர் அற்புதமான பக்கம்.

உலக மகா காப்பியங்களில், கும்பகர்ணனுக்கு இணையாகத்தூங்கிய பாத்திரம் எதுவும் இல்லை. ஆனால், அந்தத் தூங்குமூஞ்சிப் பாத்திரத்தைக் கூட கம்பன், ஒரு மாவீரனாக, மான வீரனாக, கருணை வள்ளலாக, செஞ் சோற்றுக் கடன் தீர்த்த செம்மலாக, சித்தரித்து இருக் கின்றான்''

பேசுவது மானம் இடை
பேணுவது காமம்
கூசுவது மானுடரை
நன்று நம்கொற்றம்

என்று அண்ணன் ராவணனை இடித்துரைக்கும் போதும்,

தம்பி வீடணன், ராமன் கட்சிக்குத்தன்னை இழுக்கிற போதும்,

கும்பிட்டு வாழ்கிலேன் – யான்
கூற்றையும் ஆடல்கொண்டேன்

என்று ஒரு சுத்த வீரனாகத் திகழ்கிற போதும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எத்தனை திருத்தியும் திருந்தாத அண்ணனோடு, சேர்ந்தே சாவதா? விலகி வாழ்வதா? என்ற மனப் போராட்டத்தில், செத்து மடிவதே மேல் என்று முடிவெடுக்கிற போதும், கும்பகர்ணன் என் உள்ளத்தையே கொள்ளை கொண்டு விட்டான்.

ஆகையினாலேதான் கம்பன் கூடக் கும்பகர்ணனை, நம்ம ஊர் சினிமாக்களில் கதாநாயகனை அறிமுகப் படுத்தும்போது, அவனுடைய பூட்ஸைக் காட்டி,அப்புறம் அவன் போட்டிருக்கும் கறுப்புக் கண்ணாடி வரை, ஒவ் வொன்றாகக் காட்டி, நமக்கு ஒரு பிரமிப்பையும், எதிர் பார்ப்பையும் ஏற்படுத்துவதைப் போல, கும்பகர்ணனை, பாலகாண்டத்தையும், அயோத்திய காண்டத்தையும் தாண்டி, ஆரண்ய காண்டத்தில், ஐந்தாவது படலத்தில், மூக்கும் முலையும் அறுபட்ட சூர்ப்பனகை,தன் உறவுக் காரர்கள் ஒவ்வொருவரையும் கூவி அழைத்தபோது, ஒருவரும் வராத காரணத்தால், ''கும்பகர்ணனைப் போல் உறங்குகிறார்களோ?'' என்று கும்பகர்ணன் நாமத்தை மட்டும் அறிமுகப்படுத்துகிறான் கம்பன்.

அதற்கடுத்து சுந்தர காண்டத்தில், மாவீரன் அனு மனால், கும்பகர்ணனின் தோற்றப் பொலிவை அறிமுகம் செய்கிறான் கம்பன்.

அதற்குப் பிறகு யுத்த காண்டத்தில், தூங்கிக் கொண் டிருந்த கும்பகர்ணனை எழுப்பி அழைத்து வந்து, ராவணனிடம் விட்ட போது,

தூக்கம் கலைந்த கையோடு
ஆனதோ வெஞ்சமர்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அலகில் கற்புடைச் சானகி
துயர் இனம் தவிர்ந்தது இல்லையோ?

அதாவது கற்பின் ஜானகியை விடுவித்தாயா? - இல்லையா? என்று கற்புநெறியனாய், நேர்மை வீரனாய் நின்று கேட்கிறான். இறுதியில் செஞ்சோற்றுக் கடனுக் காகவும், உடன் பிறந்த பாசத்துக்காகவும் உயிரையும் விடுகிறான்.

ஒரு தூங்குமூஞ்சி பாத்திரத்தின் மூலம், ஒரு காப்பிய விளக்கமளித்த கும்பகர்ணன் என்னை அதிகம் கவர்ந்தவன் ஆகிறான்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3
இலட்சுமணன்

'அண்ணன் எப்ப சாவான், திண்ணை எப்பக் காலி யாகும் என்று ஒரு பழமொழி உண்டு. அந்தப் பழ மொழிக்கு ஆதாரம், பாரதத்திலே துரியோதனாதிகள்.

ஆனால் இராமாயணத்தில் வருகிற சகோதரர்களான, கோசலையின் மகன் ராமனும், கைகேயியின் மகன்

In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பரதனும், சுமத்திரையின் மகன்களாக இலட்சுமணனும், சத்ருக்கனும் தனித்தனித் தாய் வயிற்றில் பிறந்திருந்தாலும் அன்பு காட்டுவதில், ஒருவரை ஒருவர் மிஞ்சி நிற்கின்றனர். இவர்களில் இலட்சுமணன் என்னை நிறையக் கவர்ந்த வனாகிறான்.

கூனியின் சூழ்ச்சியால் கைகேயியின் கட்டளைப்படி தன் மகன் பரதன் நாடாளவும், ராமன் காடேகவும் ஆணை யிடுகிறாள். ஆணைப்படி ராமன், காட்டிற்குப் புறப்படும் பொழுது ராமன் எவ்வளவு தடுத்தும் தம்பி இலட்சு மணனும், தேவி சீதையும், 'நீங்கள் இருக்கும் இடமே எங்களுக்கு அயோத்தி' என்று உடன் செல்கின்றனர்.

ஆரண்ய காண்டத்தில் ராவணன், சீதையை சிறை யெடுக்கிறான்.

அந்தத் துக்கமும், வெட்கமும் ராமனை வாட்ட, இலட்சுமணனிடம் சொல்கிறான். ''மனைவியை மாற் றானிடம் பறி கொடுத்து விட்டுத் தம்பியினால் காப்பாற்றப் பட்டு கொண்டிருக்கிறான்' என்று பிறரால் இகழ்ந்து பேசப் படுவதை விட, ராமன் இறந்து போனான் என்று சொல்லப் படுதலே நல்லது. ஆகையால் நீ திரும்ப ஊருக்கே சென்று விடு'' என்கிறான்.

இதற்கு முன்னாலே ராமனோடு லட்சுமணனை அனுப்புகிற பொழுது சுமத்திரை சொல்வாள், ''இலக் குமணா, ராமனே உனக்குத் தந்தை, சீதையே உனக்குத் தாய். ராமனுக்குப் பின்னே செல். அவனுக்குத் தம்பி என்று எண்ணிக் கொண்டிராமல், 'அடிமை' என்று எண்ணிக் கொண்டு செல். ராமன் அயோத்திக்குத் திரும்பி வந்தால்...

In Public domain. Digitization © Muthulakshmi Research Academy

நீயும் வா'' என்று சொன்னதை நினைவுபடுத்தி, சீதையை மீட்காமல் திரும்பிச் செல்ல மாட்டேன் என்று ரா.மனிடம் கூறி, இறுதி வரைத் தன்னை ஒரு அடிமையாகவே பாவித்துக் கொள்கிறான்.

அடுத்து, ராவணன் சீதையை விண்வெளியாகக் கடத்திச் சென்ற போது, காலில், கையில், காதில், மூக்கில், கழுத்தில், இடுப்பில் அணிந்திருந்த தன்னுடைய அணி கலன்களைக் கழற்றி ஆடையில் முடிந்து, கீழே எறிந்ததைப் பிடித்துக் கொண்ட சுக்ரீவன், ராம, இலக்குவணனிடம் ஒப்படைத்து, இது ஜானகி தேவியுடையதா பாருங்கள் என்று கொடுத்த போது, லட்சுமணன், **சீதை அணிந்திருந்த மெட்டி ஒன்றை மட்டும் அடையாளம் தெரிந்து கொள் கிறான்.** காரணம், குனிந்த தலை நிமிராத இலக்குவன், தாயினும் மேலான சீதா தேவியின் பாதத்தைத் தவிர, அவன் அவளின் முழு உருவத்தையும் பார்த்தவனல்ல. அப்படிப் பட்ட ஒழுக்க சீலன் இலக்குவன்.

தன் தாய் சொன்ன வார்த்தைப்படி இலக்குவன், சீதையை தாயாக மட்டும் நினைத்து, உடன் இருந்து, 'தம்பி உடையான் படைக்கு அஞ்சான்' என்ற பெருமையை நிலை நாட்டி யவன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4

மண்டோதரி

ஸ்ரீமத் கம்பராமாயணத்திலே,காப்பிய நாயகி சீதா பிராட்டிக்கு அடுத்து என்னை வெகுவாகக் கவர்ந்த பெண் பாத்திரம், இராவணனின் மனைவி மண்டோதரி.

ஒப்பாரும், மிக்காரும் இல்லாத சகலகலாவல்லவன் இராவணன். பிறன் மனை நோக்கி, பெரும் பிழை தேடிக்

கொண்டதால்தான், இறுதியில் இராவணன் தண்டிக்கப் படுகிறான்.

அநேகம் தாய்மார்களுக்கு, தங்களின் கணவன்மார் களைப் பற்றிய அருமை பெருமைகள், அநியாயங்களைக் கூடக் கணவன் இறந்த பிறகு, மாற்றார் சொல்லித்தான் தெரிந்து கொள்வார்கள். அவர்களுக்கு அன்றாடத் தேவையான சமையலறையிலிருந்து கட்டிலறை வரைக் கும் தேவையானவைகள் பூர்த்தியாகி விட்டாலே போது மானது. ஆனால் மண்டோதரி, ராவணனின் உள்ளும் புறமும் அறிந்தவள். அதனால்தான், தன் கணவன், ராம பிரானால் கொல்லப்பட்டு போர்க்களத்தில் பிணமாகக் கிடந்த போது,

''பாவி... சண்டாளா, என்னை விட்டுட்டு சீதை மேலே ஆசை வச்சியே... அநியாயமா போயிட்டியே...'' என்று புலம்பவில்லை. அதற்கு மாறாக, தன் கணவன் அருமை பெருமைகளுக்குப் பங்கம் வந்து விட்டதே, மாசுபடாத புகழுக்கு களங்கம் ஏற்பட்டு விட்டதே என்று, 'தன் கணவன் இராவணனது வீரத்துக்கு சமானமில்லாத சாதாரண மானுடன் ஸ்ரீராமனின் பாணம் இப்படித் துளைத்து விட்டதே' என்று வேதனைப் படுகிறாள். பிறகுதான் புலம்புகிறாள்.

'வெள்ளருக்குச் சடைமுடியான்
வெற்பெடுத்த திருமேனி மேலும்கீழும்
எள்ளிருக்குமிடமின்றி
யுயிரிருக்குமிடனாடி யிழைத்தவாறோ
கள்ளிருக்கும் மலர்கூந்தல்
சானகியை மனச்சிறையிற் கரந்தகாதல்

In Public Domain. Digitized by Siddhanta eGangotri Gyaan

உள்ளிருக்குமெனக் கருதியுடல் புகுந்து
தடவியதோ வொருவன் வாளி'

இங்கே மண்டோதரி தனக்கு ஏற்பட்ட இழப்பைக் கூடப் பெரிதுபடுத்தாமல், தன் கணவனுக்கு இப்படியொரு இழுக்கு நேர்ந்து விட்டதே என்றுதான் வேதனைப் படுகிறாள்.

'ராட்சஸகுல ராஜசிங்கமே, நீ சீதையை சிறை யெடுத்து வந்ததில் இருந்து, என் மகன் முதல், கொழுந் தர்கள் வரை சொந்தம், பந்தம் எல்லோருமே சீதையை விட்டு விடுக, என்று கண்டித்தார்கள். ஆனால், நான் ஒருத்தி மட்டுமே வாய்மூடிப் பேசாமல் இருந்து விட்டேன். ஒருவேளை நான் உங்களை 'கற்பணிகலன் சீதை'யை விட்டு விடுங்கள் என்று அன்பாய்க் கடிந்திருந் தால் கூட சீதையை விடுவித்து இருப்பீர்கள். நீங்கள் பெற்றிருந்த வரங்களின் பெருமையைக் கண்டு எக்களிப்புக் கொண் டிருந்தேன். நீங்கள், இப்படி இறந்து போவீர்கள் என்று தெரிந்திருந்தால், தங்களை என் வார்த்தைக்குள் கட்டுப்பட வைத்துக் கற்பின் ஜானகியை விடுவித்திருப்பேனே' என்கிறாள் மண்டோதரி.

அகில உலகத்தையே தன் கட்டுக்குள் வைத்திருக்கும் வீர பராக்கிரமசாலியான ராவணனை, பெண் ஒருத்தி 'கட்டுப்பட வைத்திருப்பேளே' என்று சொல்கிறாள். இதிலிருந்து மனைவி கணவனுக்குக் கட்டுப்பட்டவள் என்றும், நீ என்ன சொல்வது, நான் என்ன கேட்பது என்ற ஆண் ஆதிக்கமோ, பெண் ஆதிக்கமோ இல்லாமல் சம ஆதிக்கம் இருந்திருக்கிறதல்லவா? அதற்குப் பிறகுதான் தன் நிலை வருந்திச் சொல்கிறாள்,

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

'நாயகனுக்கு முன் இறக்காமல் பின் இறந்த பேறை, என்ற பெரும் பழியை எனக்கும் தேடித் தந்து விட்டீரே' என்று இராவணன் மார்பில் வீழ்ந்து, உயிரை விட்டாள் மண்டோதரி.

அரக்கர் குலத்தில் அவதரித்து, ஒரு வில்லனுக்கு வாழ்க்கைப்பட்டு, கற்பிற் சிறந்தவளாய்த் திகழ்ந்து, ஒரு கணவனுக்கு மனைவியானவள் எப்படி இருக்க வேண்டும், என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்த ஒரே பாத்திரம் மண்டோதரிதான். காரணம், ராவணனுக்கு யார் யார் மூலமாகவோ துன்பம் வந்தது. ஆனால்... மண்டோதரி எந்தச் சூழ்நிலையிலும் முகத்தில் ஒரு சிறு வாட்டத்தைக் கூடக் காட்டி ராவணனைச் சிறுமைப் படுத்தவில்லை. அதனால்தான் மண்டோதரி என்னை அதிகம் கவர்ந்து நிற்கிறாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



5

அனுமன்

இராமாயணத்தில் என்னை அதிகம் கவர்ந்தவர் களில், அனுமன் தலையாய இடத்தைப் பெறுகிறார். ராமனோடு அனுமன் சேர்ந்த பிறகு, சீதையை மீட்டுக் கொண்டு வரும் வரை, அனுமனின் அசகாய சூரத்தனம் உங்களுக்கெல்லாம் தெரியும். ஆனால் ராமனிடம் சேரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வதற்கு முன்பிருந்த அனுமனை அநேகம் பேருக்குத் தெரியாது.

ஆஞ்சநேய சுவாமி வாலியினிடத்திலே அமைச்சராக இருந்தவர். வாலி, தன் தம்பியாகிய சுக்ரீவனை நியாயமில்லாமல் அடித்து விரட்டுகிறான். எனவே பயந்து போன சுக்ரீவன், மதங்க மலை ஆஸ்ரமத்தில் ஒளிந்து வாழ்கிறான். மதங்க மலைக்கு வாலி வந்தால், அவனுடைய தலை ஆயிரம் துண்டுகளாக வெடித்து விடும். இது மதங்கன் சாபம். இந்த சாபம் மட்டும் இல்லையானால், சுக்ரீவன் அன்றே மாண்டிருப்பான். அப்பொழுது வாலியினிடத்திலே முதலமைச்சராக இருக்கிற அனுமன், ''அறநெறியும், அரச நெறியும் இல்லாத உன்னோடு என்னால் இருக்க முடியாது'' என்று கூறி, முதலமைச்சர் பதவியையே ராஜீனாமா செய்து விட்டு, எந்தப் பதவியும் இல்லாத சுக்ரீவனோடு சேர்ந்து கொள்கிறார். இந்த ரகசியம் வெகு பேருக்குத் தெரியாது.

ஆஞ்சநேய சுவாமிகள் கல்லாத கலை கிடையாது. கல்விக்குத் தலைவன் ஆதித்த பகவான். இந்த ஆதித் தனிடம் சிஷ்யனாக இருந்து எல்லாக் கலைகளையும் கற்றுக் கொண்டார். ஆதித்த பகவான் ஒரு பக்கமா இருந்தா பள்ளிக்கூடம் நடத்துறாரு...? அவர் வினாடிக்கு 80 கோடி மைல் வேகத்தில் போகிறவர். அந்த வேகத்திற்குத் தானும் சென்று, பாடம் கற்றவர் ஆஞ்சநேயர்.

காதல் நான்முகனாரும் களிப்பறிய
கலைகள் அனைத்தும் கதிரோன் முன்
சென்று ஓதினன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அநேகம் பேர் வேதம் ஓதுவார்கள், உணர மாட்டார்கள். ஓதுவது வேறு; உணர்வது வேறு. ஒருத்தன் தேவாரம் பாடுவான். அதுக்கு அர்த்தம் தெரியாது. கார் ஓட்டுவான்; மெக்கானிசம் தெரியாது. நல்லா சாப்பிடுவான்; இவனுக்கு சமைக்கவும் தெரியாது. அதுல ஏ, பி,சி, டி ங்கற சத்து இருக்குதான்னும் தெரியாது. அது போல, வேதம் ஓதுவார்கள்; உணர மாட்டார்கள். ஆனால் ஆங்சநேயர் வேதம் ஓதியவர்... உணர்ந்தவர்!

ஆஞ்சநேயர் நின்றாலே மேரு மலை சிறியதாகி விடும். இவர் அதை விட உயரமாக இருப்பார். ஆஞ்சநேயர் ஒரு துளிக்கும், மறு துளிக்கும் இடையில் நனை யாமல் போகிற ஆற்றல் உடையவர். இவ்வளவு ஆற் றலுடைய ஆஞ்சநேயரை முதன் முதலாக சந்திக்கிறார் இராமச்சந்திர மூர்த்தி!

''நீ யாரப்பா?'' என்று கேட்கிறார். அதுக்கு 'நான் ஆஞ்சநேயர்'ன்னு சொல்லணும். ஆனா அவர் அப்படி சொல்லலை. இராமச்சந்திர மூர்த்தியைப் பார்த்த மாத்திரத்திலேயே ராமனுடைய கண்கள் ஒழுக்கமான கண்கள் என்று கண்டு கொள்கிறார். பிறகு சொல்கிறார்... '' என் அப்பா வாயுதேவன், என் தாயார் அஞ்சனாதேவி, நான் அனுமன்'' என்கிறார். அடுத்து, ''நீ என்ன பதவியில் இருக்கிறாய்?'' என்று கேட்கிறார்.

''நான் முதலமைச்சராக இருக்கிறேன்'' என்று சொல்லச் கூச்சப்பட்ட ஆஞ்சநேயர்,

இம்மலையிலிருந்து வாழும்
எழுகதிர் பரிதிச் செல்வன்
செம்மலுக்கு ஏவல் செய்வேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''நான் சுக்ரீவனக்குப் பணியாள்'' என்று அத்தனை அடக்கமாகச் சொல்கிறார்.

''அப்பா, நீ இந்தச் சின்னஞ்சிறு வயசுல இவ்வளவு அடக்கமா இருக்கியே... '' என்று வியந்து கேட்கிறார். உடனே ஆஞ்சநேயர். ''என் வடிவத்தைப் பாருங்கள்'' என்று விஸ்வரூபம் எடுக்கிறார். நாராயணன் என்றும், புண்டரிரட்சன் என்றும், கமலக் கண்ணன் என்றும் வர்ணிக்கப்படுகிற, அத்தகைய கண்களையுடைய ராமர், ஆஞ்சநேயருடைய விஸ்வரூபத்தை எட்டி எட்டிப் பார்த்தும், திருமுகமே தெரியவில்லையாம். அப்பொழுது தான் லட்சுமணனிடத்திலே ராமர் கேட்கிறார்...''இவர் சிவபெருமானா... அல்லது பிரம்ம தேவனா?...'' என்று வசிஷ்டருடைய சிஷ்யன், காப்பிய நாயகன் இராமச்சந்திர மூர்த்தியே,ஆஞ்சநேயரைப் பார்த்து வியக்கிறார் என்றால், இந்த அனுமனின் பெருமையை யாரால் அளவிட முடியும்...? அத்துணை பெரியவராக இருந்தும் மிகச் சிறியவராகவே நடந்து கொண்டார் அனுமார். அதைவிட ஆஞ்சநேய சுவாமிக்கு மற்ற எந்த பாத்திரத்துக்கும் இல்லாத சிறப்பு, அவர் ஒருவர் மாத்திரமே ஆசாபாசங் களைத் துறந்து நித்திய சிரஞ்சீவியாக வாழ்ந்தவர். அதனாலேயே ஆஞ்சநேயர் என்னை அதிகம் கவர்ந் துள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6
இராவணன்

ஸ்ரீமத் இராமாயணத்தில் பிறன்மனை நோக்கிய பெரும் பிழையை நீக்கிப் பார்த்தால் ராவணனை விட உயர்ந்த பாத்திரம் வேறொன்றும் இல்லை.

அசோகவனத்திலே ராவணனால் சிறை வைக்கப் பட்ட சீதாபிராட்டி சொல்கிறாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''ஏ! ராவணேஸ்வரா... நான் யார்? என் கணவன் யார்? என் கொழுநர்கள் யார்? இவர்களுடைய பலம் என்ன? பிரம்மா, இந்திரன், சந்திரன் எல்லோருமே என் உறவுக் காரர்கள். என்னிடம் வாலாட்டாதே! ஜாக்கிரதை யாக இரு'', என்று மிரட்டுகிறாள்.

இவற்றையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்ட ராவணன் சொல்கிறான். ''பெண்ணே! நீ உறவுக் காரர்கள் என்று பட்டியல் போட்டாயே... அவர்களில் ஒருவன் என் கால் பிடித்தும், ஒருவன் என் கை பிடித்தும் எனக்கு அடிமை வேலை செய்து வருகிறார்கள்.'' என்று சொல்கிற போது , சீதைக்கு மட்டுமல்ல, நமக்கும் திகில் உண்டாகிறதல்லவா?

இராவணன், வெள்ளியங்கிரி மலையைக் கையில் எடுத்தவன், வேதங்கள் எட்டும் வென்றவன், வெள்ள நீர். உலகம் ஆண்ட வாரணம் பொருத மார்பன்.

யாழ் ஒலியும்,குழல் ஒலியும் பெண்களின் சிரிப் பொலியும்தவிர அழுகுரலே கேட்டறியாத இலங்கையில், கேட்ட முதல் அழுகுரல்... சூர்ப்பனகையின் அழுகுரலே!

இந்த அழுகுரலால் தான் முக்கோடி வானவரும், 'முயன்றுடைய பெருந்தவமும் உலகின் எத்திக்கிலும் உள்ளவர்களால் வெல்லப்படாய்' என்று வரம் பெற்ற இராவணன் அழிவுப் பாதையில் அடியெடுத்து வைக் கிறான்.

அரியணையில் அமர்ந்திருக்கிறான் அரக்கர் கோமான். அங்கே ராம இலக்குவனால் மூக்கும் முலையும் அறுபட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலையில் சூர்ப்பனகை தலைவிரி கோலமாய் ஓடி வருகிறாள். தன் வாழ்நாளில் முதல் அழுகுரல் கேட்ட ராவணன் முகத்தில் ஏற்பட்ட சினத்தால் புருவம் நெறிந்ததைக் கண்டு தேவர்களில் இருந்து, எமன் வரை... அஞ்சி நடுங்கினர். இவ்வளவு சினத்திலும், தங்கை சொன்ன குற்றச்சாட்டுக்களைக் கேட்டுக் கொண்ட இராவணன் உடனே உன்னை மானபங்கப் படுத்தியவர் களை விட்டேனா பார் என்று வரிந்து கட்டிக் கொண்டு வாளை உருவி விடவில்லை. மாறாக அவன்பேசுகிறான்.

''அவர்கள் உன்னை இந்த அளவுக்கு அவமானப் படுத்த நீ என்ன குற்றம் செய்தாய்? '' என்று கேட்கிற பொழுது, இத்தனை சீலம் வாய்ந்த ராவணனா... பிறன் மனை மீது பேராசை வைத்தான் என்று எண்ணத் தோன்று கிறதல்லவா? ராவணனின் இந்த பதிலைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத சூர்ப்பனகை வேறு வழியில் ராவணனை சபலத்துக்கு உள்ளாக்குகிறாள். இங்கேதான் ராவணனின் சஞ்சலமும் ஆரம்பமாகிறது.

''என் வயின் உற்ற குற்றம் யாவர்க்கும்
எழுதொணாத
தன்மையின் ராமனோடுந் தாமரை தவிர
போந்தாள்
மின் வயின் மருங்குல் கொண்டாள்
பொருட்டினாள் புகுந்தது என்றாள்...''

இப்படிச் சீதையின் எழிலை ஐம்பத்திரண்டு அடிகளில் வர்ணிக்கிறாள். இதில் வீழ்ந்த ராவணன், கடைசி வரை எழுந்திருக்கவே இல்லை. சீதையின் எழிலை சிந்தை குளிரக் கேட்ட ராவணன்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"கரனையும் மறந்தான்;
தங்கை மூக்கினை கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான்;
உற்ற பழியையும் மறந்தான்- வெற்றி
அரனையுங் கொண்ட காமன்
அம்பினால் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்
கேட்ட மங்கையை மறந்திலாதான்..."

இப்படி எல்லாவற்றையும் மறந்த ராவணன் சீதையை மட்டுமே நினைக்க ஆரம்பித்து, அவளை சிறையெடுத்து இறுதியில் போர்க்களத்தில் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியோடு மோதி,தாக்குப் பிடிக்கமுடியாமல் தன் படைக்கலன்கள் அனைத்தையும் இழந்து நிற்கிற போது,இராமன், 'இன்று போய் நாளை வா' என்கிறான்.

இதுவரை யாரை அற்ப மானுடர் என்று இழித்தும், பழித்தும் பேசி வந்தானோ, அதே சாதாரண மானுடன், தன்னை மன்னித்து அனுப்புகிற அவல நிலையில் கூட காமத்தீயில் விழுந்த ராவணன், அண்டத்தையே அடக்கி ஆண்டு, இன்று அற்ப மானுடனிடம் தோற்று விட்டதால், ஊர் சிரிக்கும், உலகம் சிரிக்கும், வான் சிரிக்கும், வையம் சிரிக்கும் என்றெல்லாம் சிறிதும் வெட்கப்படாமல்,

சீதை தன்னைப் பார்த்துச் சிரிப்பாளே, என்று வெட்கப் படுகிறான்.

"வேல் நக நெடுங்கண், செவ்வாய்
மெல்லியல் மிதிலை தந்த
சானகி நகுவள் என்றே
நாணத்தால் சாம்புகின்றான்..."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பிறன்மனை நோக்காத பேராண்மை
சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு"

என்ற வள்ளுவனின் ஒன்னேமுக்கால் அடி குறளுக்குக் கம்பன் ஒரு பாத்திரம் மூலம் காவியமே படைத்து விட்டான். எத்துணை உயர்ந்த அருசுவை உணவின் நடுவே சிறு நரகல் இருந்தால் அந்த அருசுவை உணவை உண்ண முடியுமா? அதைப் போலத்தான், அண்டத்தை வெல்லக் கூடிய ஆற்றல் இருந்தாலும், காமம் என்ற சிறு நரகலால், அத்தனையும் இழந்து அழிவது உறுதி என்பதைத்தான், ராவணன் உணர்த்துகிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7

ஸ்ரீராமன்

உலகத்திலே எத்தனையோ மனிதர்கள் தோன்று கிறார்கள். ஆனால் சிலர் மறைந்தும், மறையாமலும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற ஒருவர் ஸ்ரீஇராமச்சந்திரன். எல்லோருடைய உள்ளத்திலும் நிறைந்தவன். அதனால்தான் அவருக்கு ஆத்மராமன் என்றும் பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ராமன் 12 வயதிலே சீதையைத் திருமணம் செய்து கொண்டார். 12 ஆண்டு அயோத்தியிலே வாழ்ந்தார். 14 ஆண்டு வனவாசம் சென்றார். 38வது ஆண்டில் முடிசூட்டு விழா நடந்தது. ராமர் ஆட்சி புரிந்த போது, மூட்டைப் பூச்சி கடிக்காது. கொசுத் தொல்லை கிடையாது. விலங்குகள் எல்லாம் சாதுக்களாய்த் திகழ்ந்தது. இரண்டு குழந்தை களுக்கு தந்தையானார். அப்பொழுதே 'நாமிருவர் நமக்கிருவர்!' பிறகு சீதை இறந்து விட்டாள். அதற்குப் பிறகு ஸ்ரீராமன் பத்தாயிரம் ஆண்டுகளாக பிரம்மச்சாரி யாகவே வாழ்ந்தார்.

எந்த மாதரையும் ஏறெடுத்தும் பார்க்காமல், உப் பில்லாத கஞ்சியைக் குடித்துக் கொண்டு, தர்ப்பைப் புல்லில் படுத்து வந்தார். ராமன் நினைத்திருந்தால், எத்தனை பெண்களை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் ராமன்,

ஒரே மாட்ட, ஒரே பாண
ஒரே பத்தினி

அதாவது, ஒரு சொல், ஒரு வில், ஒரு இல் என்ற ஏகபத்தினி விரதனாய் வாழ்ந்தார்.

இப்பிறவிக்கு இரு மாதரை சிந்தையாலும் தொடேன்... என்ற பண்பாட்டுடன் வாழ்ந்தவர்.

ராமன் ஒரு கருணை வள்ளல். அதனால்தான் தன் மனைவியைப் பத்து மாதம் சிறை வைத்திருந்த ராவண னுக்கும் கருணை காட்டினார்.

முதல்நாள் போரிலே ராவணன் தோற்று, வில் இழந்து, சொல் இழந்து, படை இழந்து, நடை இழந்து, இருபது கையையும் தொங்கப் போட்டு ஆலமரத்து விழுதுகள் மாதிரி நிற்கிறான். ஒரு பாணம் போட்டா,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ராவணன் தலை விழுந்துடும். ஆனா ராமன் அப்படிச் செய்யலை...

ஆளயா உனக்கு அமைந்தன;
மாருதம் அறைந்த
பூளை ஆயினை; கண்டனை
இன்று போய் போர்க்கு
நாளை வா என நல்கினன்
நாடு இளங் கழுகின்
வாளைதா வுறு கோசலை
நாடுடைய வள்ளல்...

அடுத்து, பதவி வந்துட்டா பழசெல்லாம் மறந்து போகும். இது இன்றைய நிலை. ஆனால் ஸ்ரீராமன் அப் படிப்பட்டவன் இல்லை. அதற்கு ஓர் உதாரணம்.

ராமனுக்குப் பால்ய வயசிலே சீனிவாசன்னு ஓர் ஏழை நண்பன் இருந்தான். 'அடே ராமா,அடே சீனு' ன்னு கூப்பிடுற அளவுக்கு நெருங்கிய சிநேகம். கொஞ்ச நாளைக்கப்புறம், சீனிவாசன் வெளியூர் போயிட்டு, வறுமையிலே வாடி, திரும்பவும் அயோத்திக்கு வந்திருக் கான். உடனே தன்னுடைய பால்ய சிநேகிதன் ராமன் எங்கேன்னு விசாரிச்சிருக்கான். ராமன் காட்டுக்கு வன வாசம் போயிருக்கான்னு சொல்றாங்க. பதறிப் போன சீனிவாசன், 'ராமா,ராமா,நீ எங்கேடா இருக்கே? உனக்கு மரம் ஏறக்கூடத் தெரியாதே. நான் உன்கூட இருந்திருந்தா, மரமேறி, கனி பறிச்சு உனக்கு கொடுத்திருப்பேன்னு' புலம்பித் தேடுறான். கிடைக்காம அலைஞ்சு அலைஞ்சு திரும்பவும் அயோத்தி அரண்மனைக்கு வர்றான். அன்னிக் குத்தான் ராமனுக்குப் பட்டாபிசேகம். ராமன் சிம்மாசனத் துல புடைசூழ அமர்ந்திருக்கான். அழுக்கு வேட்டியோட வந்த நண்பன் சீனிவாசன், ராமனைப் பார்த்து உணர்ச்சி பொங்க,

In Public Domain. Digitization by eGangotri and Sarayu Trust.

''அடேய் ராமா... கானகம் போயிருந்தியாமே?... எப்படா திரும்பி வந்தே?'' என்று அழைத்துக் கொண்டே இராமனை நோக்கி வருகிறான். சபையே ஆடிப் போயிடுச்சு. வளர்த்த நானே ராமனை ரகுநாதான்னு தானே கூப்புடுறேன். 'டேய் ராமா' ன்னு கூப்பிடுறவன் இவன் எவன் என்ற வசிட்டர் தர்ப்பக் கட்டையைத் தூக்கினார் அடிக்க. லட்சமணன் கோதண்டத்தை ஓங்கினான். ஆஞ்ச நேயன் வாலைத் தூக்கினான் அவனை சட்டினியாக்க. இப்படி ஆளாளுக்கு கை ஓங்கிய நேரத்தில், ராமன் சிம்மா சனத்தில் இருந்து, பளிச்சுன்னு எழுந்தான். ராமன் அவனை அடிக்கத் தான் போறான்னு எல்லாரும் நினைச்சாங்க.

ஆனா... அவனை ஆரத் தழுவி, ஆனந்தக் கண்ணீர் வடிச்சு, அப்படியே அணைச்ச வாக்கிலேயே அழைச்சுட்டு வந்து, 'ஜானகி... கொஞ்சம் தள்ளிக்க'ன்னு சொல்லி, அந்த சிம்மாசனத்துல தன்னுடைய நண்பனை உக்கார வைச்சு, சரியாசனம் கொடுத்து,

''பெரியோர்களே, எங்க அப்பா ஒருத்தர்தான் என்னை 'அடேய் ராமா'ன்னு கூப்பிடுவாரு. இப்ப அவரு இல்லை. இருந்திருந்தா இந்தப் பட்டாபிஷேக விழாவைப் பார்த்து, 'அடேய் ராமா'ன்னு மகிழ்வாரே!... அவரு இல்லை யேன்னு நினைச்சேன். அப்பாதான் என் நண்பன் வடிவிலே வந்து, 'அடேய் ராமா'ன்னு அழைத்தார். எங்க அப்பா தசரதன் இல்லாத குறையை என் நண்பன் சீனிவாசன் தீர்த்து விட்டான். இனி என் நண்பன்தான் என் அப்பா'' என்கிறார்.

எல்லோரும் ராமனின் கருணையைப் போற்றி னார்கள். அதனாலே, இராமாயண காப்பிய நாயகன் ராமன் என்னைக் கவர்ந்தவன் ஆகிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



8
சீதை

உலகத்தில் எத்தனை எத்தனையோ நலன்கள் இருந்தாலும், மனைவியின் மூலம் விளைகின்ற நலமே உயர்ந்தது.

புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை
இகழ்வார்முன்
ஏறுபோல்பீடு நடை

என்றார் திருவள்ளுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உத்தமமான பத்தினிகள் நாட்டில் இல்லை யென்றால் எந்த நலன்களும் இருந்திட முடியாது.

இராமாயணத்திலே சீதை, தான் வாழ்ந்த ஒவ்வொரு வினாடியும் தன் கணவன் ஸ்ரீராமனுக்குப் புகழ் தேடிக் கொடுத்தாள். சீதையுடைய கற்பு நெறியினாலேதான் இராமன் புகழ் இன்றளவும் புகழ்ந்து பேசப்படுகிறது. எனவேதான் சீதையின் மாண்புகளை, எல்லாத்துறையிலும் வித்தகரான ஆஞ்சநேயர் மூலம் கம்பன் சொல்லுகிறான்.

முதன் முதலாக அசோகவனத்திலே அனுமன், சீதையைப் பார்க்கிறான். பார்த்த மாத்திரத்திலேயே அப்படியே பிரமித்துப் போகிறான். உடனே அவன் சீதையைப் பாராட்டாமல்...

''நான் எதைப் பாராட்டுவது. இந்தக் கற்பின் தேவியை மனைவியாகப் பெற்ற ஸ்ரீராமனைப் பாராட்டுவதா? அல்லது பத்து மாதமாக உண்ணாமல், உறங்காமல் தவம் செய்து வருகின்ற இந்தக் கற்பின் தெய்வத்தைப் பாராட்டு வதா?'' என்று சிந்தை மயங்கிச் சொல்கிறான்.

பிறகு தன்னை யாரென்று அறிமுகம் செய்து கொண்டு, ''கற்பின் தாயே, என் தோளில் அமர்ந்து கொள். என் புஜ வலிமையால் உன் கணவனிடம் சேர்த்து விடுகிறேன்'' என்று சொன்னதற்குச் சீதை சொல்கிறாள்...

''அனுமனே! இந்த அரக்கர்களை ஒரே நொடியில் என் கற்புத் தீயால் எரித்து விடுவேன். ஆனால் என் கணவர் எத்தனை வீரம் பொருந்தியவர் என்பதை எதிரிகள் உணர வேண்டாமா? அதற்காகத்தான் நான் இத்தனை துயரங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களையும் சகித்து வருகிறேன். எனவே அவர் எனக்காக வர வேண்டாம். அவருடைய வீரத்துக்கு களங்கம் வந்திடா வண்ணம், அவரின் வீரத்தை நிரூபிக்கவாவது என்னை இங்கிருந்து மீட்கச் சொல்லுங்கள்...'' என்கிறாள். அந்தத் தாங்கவொண்ணாத் துயரச் சூழலில் கூட, அவள் தன் கணவனின் புகழுக்குக் களங்கம் வந்திடக் கூடாது என்பதில் தான் கவனமாக இருக்கிறாள்.

பிறகு ராமனிடத்திலே சீதையைப் பற்றிச் சொல்கிற போது, ''ராமபிரானே... இலங்கையிலே உன் மனைவியைப் பார்த்தேன்... பேசினேன்... நீ கவலைப்படாதே!'' என்று சொல்லவில்லை. மாறாக, ''ராமபிரானே... குடிப்பிறப்பு என்கிற ஒழுக்கமும், கற்பு என்கிற பெருங்குணமும்; பொறுமை என்கிற குணமும் ஆகிய மூக்குணங்களும் கை கோர்த்துக் கொண்டு களிநடம் புரிகின்ற கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்தேன்'' என்று தான் சொல்கிறான்.

நள சக்கரவர்த்தி தன் மனைவி தமயந்தியை நடுக் காட்டில் ராத்திரியில் விட்டுட்டு ஓடி விட்டார். அதற்காக அவர் கருணை இல்லாதவர் என்று சொல்ல மடியாது. நம்மோடு கானகத்தில் இருந்தால் துன்பம் உண்டாகும் விட்டு விட்டுச் சென்று விட்டால் தாய் வீடு சென்று சுகமாக இருப்பாள் என்று நினைத்துத்தான் விட்டுச் சென்று விட்டார்.

அப்பொழுது ஒரு மலைப் பாம்பு அவளைப் பிடித்துக் கவ்விக் கொண்டது. கதறிக் கதறி அழுதாள். உடனே வேடன் வடிவத்திலே ஒரு ஹீரோ மலைப்பாம்பை வெட்டி வீழ்த்தி அவளைக் காப்பாற்றுகிறான். அதற்காக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனின் ஆற்றலைப் பாராட்டி அவள் நன்றி சொல்கிறாள். அதற்கு அவன் நன்றிக் கடனாக,

''பெண்ணே! நீ இளையராணி. நான் இளையராஜா. வா சல்லாபிக்கலாம்'' என்று பலாத்காரம் செய்ய வருகிறான். மெல்லிய உடல் பெற்ற தமயந்தி உடல் வலிமை பெற்ற அந்த வேடனை வீழ்த்தி விடுகிறாள். எனவே அவனை வீழ்த்தியது உடல் பலம் அல்ல... கற்பின் பலம்தான்!

- ஆக கற்பு எனப் படுவதே ஒரு வகையான வீரம். எனவே அந்த வீரத்திருமகள் சீதா என்னை அதிகம் கவர்ந்த வளாகிறாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9

தர்மர்

சத்ரியன் என்றாலே, வீரம் நிறைந்தவன், போரிலே புறம் காட்டாதவன் என்பது இலக்கணம். அதனால்தான் பாரதப் போரினிலே தர்ம புத்திரர்களும், வீரப் போர் நிகழ்த்தினார்கள். அதர்ம புத்திரர்களும், வீழ்வது உறதி என்று தெரிந்தும், இறுதி வரை கோழையாகப் பின்

In Public Domain. Digitization Muthulakshmi Research Academy

வாங்காமல் வீரமாகவே வீழ்ந்தார்கள். எனவேதான் பாரதப் போரின் இறுதியிலே ஆயிரம் துர்க்குணங்கள் கொண்ட துரியோதனன் மாண்ட பிறகு, அவனுக்கும் சொர்க்கத்திலே இடம் கிடைத்துள்ளது. அதற்கு ஒரே காரணம்.. துரியோதனன் இறுதி வரை சத்ரிய மரபைக் காப்பாற்றி வீரனாகவே திகழ்ந்ததுதான்.

எந்தக் காப்பியத்திலும் தர்மனுக்கு நிகரான பாத்திரத்தைக் காண முடியாது. காரணம், மற்ற காப்பிய பாத்திரங்களில் எல்லாம் தர்ம குணமும், தயாள குணமும் ஒரு குறிப்பிட்ட, அதிக்பட்ச சதவிகிதம் கொண்டவர்களைத் தான் காண முடியும். ஆனால் தர்மப்பிரபு என்ற நாமகரணத்தோடு தர்மம் வெல்லும் என்பதை உலகுக்கு நிலை நாட்டியவர் தர்மர். தர்மம் என்பது பொன்னையும், பொருளையும் அள்ளிக் கொடுப்பதல்ல. தயாள குணத்தோடு, பொறுமையும் சேர்ந்திருக்க வேண்டும். இரண்டு குணங்களும், ஒரு சேரப் பெற்றவர்தான் தர்மர்.

பாண்டவர்கள்காட்டிலே வனவாசம் புரிந்து கொண்டிருந்த போது, அவர்களை ஒழித்துக் கட்டி விட வேண்டும் என்று துரியோதனன், தன் மனைவி மக்களுடனும், அடியாட்களுடனும் வருகிறான். அதனால் அங்கே சித்திரசேனன் என்பவன் துரியோதனின் குடும்பத்தினரையே விலங்கு பூட்டி அழைத்துச் செல்கிறான். இதைப் பார்த்த தர்மர்கண்ணீர்விட்டு அழுது, ''பீமா... அர்ச்சுனா... இங்கே வாங்கப்பா ! துரியோதனன் குடும்பத்தையே ஒருவன் துன்பத்துக்கு உள்ளாக்குகிறான். அவர்களை சீக்கிரம் போய்க் காப்பாற் றுங்கள்...'' என்று பதறுகிறார். அதற்கு பீமன், ''அண்ணே வீட்டில் அடங்காதவனை நாட்டில்

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

அடக்குவாங்க. நமக்கு செஞ்ச பாவங்களுக்கு அவன் நல்லா அனுபவிக்கட்டும்'' என்று பதில் உரைக்கிறான்.

உடன் தர்மர், ''பீமா ... தீமை செய்தவர்க்கும் நன்மை செய்வதே உண்மையான தர்மம். வீரம், மரத்தை வெட்டும் மனிதனுக்குக் கூட அது நிழல் தருகிறது. மரத்தைக் கல்லால் எரிந்தால் அது மாங்காய் தருகிறது. ஓரறிவுடைய மரத் திற்கே இந்த உயரிய பண்பு இருக்கிற போது, ஆறறிவுடைய நமக்கு எந்த அளவுக்குத் தயாள குணம் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்'' என்கிறார்.

இப்படிப் பகைவனுக்கும், காட்டுகிற தயாள குணமே தர்மத்தில் எல்லாம் தலையாய தர்மம் என்று உணர்த்தியவர் தர்மர்.

தர்மம் வெல்லும் என்கிற தைரியத்தில்தான், தன் கண் எதிரிலேயே திரௌபதியை மானபங்கப்படுத்துகிற போது கூட, சாதாரணமாக எதுவுமே நடக்காதது போல் இருக்க முடிந்தது. இப்படிப்பட்ட ஈரமான, வீரமான தாமரை போன்ற பாத்திரத்தை நாம் காண இயலாது. எனவே தர்மர் என் நெஞ்சில் நின்றவராகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10

அர்ச்சுனன்

வில்லுக்கு விஜயன், வீணைக்கு சரஸ்வதி என்பார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரை, பாரதத்தில் வீரனாக விளங்குகிற விஜயன் என்ற அர்ச்சுனன் ஒரு விவேகி. விவேகம் இல்லாத வீரம் வீணாகப் போய்விடும். அர்ச்சுனன் விவேகமுள்ள வீரன் என்பதற்கு ஒரே ஒரு சான்று.

பாரதப் போர் குறித்து இறுதிக்கட்டப் பேச்சு வார்த்தைக்காக, பாண்டவர்கள் சார்பில், அர்ச்சுனன் கண்ணனை சந்திக்க துவாரகைக்குப் புறப்படுகிறான். அர்ச்சுனன் வருவதற்கு முன்பே கௌரவர்கள் சார்பில், துரியோதனன் சென்று உறங்கிக் கொண்டிருந்த கண்ணனின் தலை மாட்டில் அமர்ந்து இருக்கிறான். பின்னால் வந்த அர்ச்சுனன் கண்ணனின் காலருகில் கை கூப்பிக் கொண்டு நிற்கிறான். நித்திரை தெளிந்த கண்ணன் முதலில் அர்ச்சுனனைப் பார்த்தான். பிறகு துரியோதனனைப் பார்த்தான்.

'' என்ன காரியமாக இருவரும் ஒரே சமயத்தில் வந்திருக்கிறீர்கள்?...'' என்றான் கண்ணன்.

முதலில் துரியோதனன் பேசினான்.

''எந்த நிமிடத்திலும் எங்களுக்குள் யுத்தம் நடக்க இருக்கிறது. நீர் எனக்கு உதவி செய்ய வேண்டும். அடுத்து, நான்தான் உதவி கேட்டு முதலில் வந்தவன்...'' என்று.

துரியோதனன் சொன்னதைக் கேட்ட கண்ணன், ''நீ முதலில் வந்தது உண்மையாக இருக்கலாம். ஆனால் அர்ச்சுனனைத்தானே நான் முதலில் பார்த்தேன். இருந்தும், இருவருக்கும் நான் சகாயம் செய்ய வேண்டியவனாக இருக்கிறேன். இருவரும் நான் சொல்வதைக் கேளுங்கள்... என்னிடம் எவருமே வெல்ல முடியாத, போர் செய்வதில் வல்லவர்களான, என் குலத்தைச் சேர்ந்த நாராயணர்கள் என்ற வீரர் கூட்டம் இருக்கிறது. இரண்டாவதாக ஆயுதம் எடுக்காதவனாகவும், யுத்தத்தில் போர் புரியாதவனாகவும், நான் ஒருவன் மட்டுமே இருப்பேன். இதை அநேகத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தடவை யோசித்துத் தனி மனிதனாகவும், ஆயுதமற்ற வனாகவும் இருக்கும் என்னுடைய சகாயம் வேண்டுமா? அல்லது.. வீரர்களான நாராயணர்களின் சேனா பலத்தை யுத்தத்தில் விரும்புகிறீர்களா?....'' என்று கேட்டான்.

உடனே அர்ச்சுனன், ''கண்ணா ஆயுதமெடுக்காமல் நீர் என் பக்கத்தில் இருந்தால் போதும்'' என்றான்.

அதற்குத் துரியோதனன், ''கண்ணா உன்னுடைய சேனை பலமே எனக்கு வேண்டும்'' என்று கூறி, ஏமாளி அர்ச்சுனன், நிராயுதபாணி கண்ணனை மட்டும் சேர்த்துக் கொண்டான் என்று மகிழ்ச்சி அடைந்தான்.

¨இங்கேதான் அர்ச்சுனன், தான் ஒரு வீரன் மட்டுமல்ல... நல்ல விவேகி என்றும் உணர்த்துகிறான். அடுத்து, அண்ணனும் காப்பல்ல... தம்பியும் காப்பல்ல... தர்மம் ஒன்றே காப்பு என்று உலகுக்கு உணர்த்திய மகாபாரதத்தில், குருட்சேத்திரப் போர் நிகழ்கிற போது, அர்ச்சுனன், அருமை மகன் அபிமன்யுவைக் கௌரவர்கள் கொன்ற போது கூட... கண்ணீர் சிந்தினால் கண்ணன் கடிவானே என்று, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, களத்திலே நின்ற காட்சி இன்றும் என் கண்ணில் அல்லவா நிற்கிறது! பிறகு எப்படி அர்ச்சுனன் என்னைக் கவராமல் இருப்பான்?!!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11
சகாதேவன்

பாரத தேசத்தில் சிறந்து விளங்குகிற இதிகாசங்கள் இரண்டு. ஒன்று ஸ்ரீமத் இராமாயணம், மற்றொன்று மகாபாரதம், விநாயகப் பெருமானே எழுதிய அரிய பெரிய ஐந்தாவது வேதம்.

மகாபாரதம் என்று சொன்னாலே, பொதுவாக உங்கள் கண்ணில் நிற்கின்ற பாத்திரங்கள் கர்ணன், கண்ணன்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அர்ச்சுனன், தர்மன், துரியோதனன், திரௌபதி ஆகியவர்களே. ஆனால் என் நெஞ்சில் நிலைத்திருக்கிற பாத்திரம், சகாதேவன். அவன் வெள்ளை வேட்டி கட்டிய சந்நியாசி, தத்துவ ஞானி. பாண்டவர்களில் இவன் ஒருவனே அரசியல் சேற்றில் இறங்காதவன். பாண்டவர்கள் பனிரெண்டு ஆண்டுகள் ஆரண்ய வாசம் முடிந்து, ஓராண்டு அஞ்ஞாத வாசம் முடித்து, உபராஜ்யத்திலே தங்கி இருக்கிறார்கள். பகவான் கண்ணன் அங்கே வருகிறார்.

தர்மர், 'சண்டை வேண்டாம். சமாதானமாகப் போக வழி செய்யுங்கள். எங்கள் ராஜ்யத்தை மீண்டும் எங்களுக்கு வாங்கிக் கொடுங்கள். காடு தீப்பிடிச்சா வில்வ மரமும் எரியும், சந்தன மரமும் எரியும். போர் மூண்டால், நல்லவர்களும் தானே மாள்வார்கள்' என்கிறார்.

அதற்கு அர்ச்சுனன்,

'மனிதரை மனிதர் அறிய
மட நாயை கடியம்பு அறியும்

துரியோதனாதிகள் மனிதர்கள் அல்ல; விலங்குகள். சமாதானமாகப் போவதென்றால், நான் ஏன் பாசுபாஸ்திரம் வாங்க வேண்டும்? பல காலம் பட்டினி கிடந்து ஒரு காலில் நின்று பிரம்மாஸ்திரங்களை வாங்கி இருக்கிறேன். அந்த அஸ்திரங்களெல்லாம் எழுந்து அர்ச்சுனா, எங்களுக்கு என்ன வேலை? எப்போது? என்று கேட்டுக் கொண்டே இருக்கின்றன' என்கிறான்.

'நாவலந் தீவினில் நாடிழந்தோம் என்று நம்மை அரசர்கள் நகைப்பார்கள். ஆகவே யுத்தம் செய்வதே சரி' என்று நகுலன் சொன்னான்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சகாதேவனிடம் கண்ணன் கேட்கிறான், 'நீ என்ன சொல்கிறாய்...?'

In Public domain. Digitization by Muthulakshmi Research Academy

அதற்கு சகாதேவன் புன்னகை பூத்தபடி,

'மணிவண்ணா... சேவித்தபடி
நீ என் செய்தால் என்? கழிந்தால் என்?'

என்று எந்த ஆசாபாசமும் இல்லாமல்,

'கண்ணா, துரியோதனன் நாடு கொடுத்தா எனக் கென்ன? கொடுக்கா விட்டால்தான் எனக்கென்ன? திரௌபதி கூந்தலை முடிஞ்சாதான் எனக்கென்ன? விரிச்சு வச்சாதான் எனக்கென்ன? என்று பேச, உடனே கண்ணன் சகாதேவனை ஆயிரம்கால் மண்டபத்திற்குத் தனியே அழைத்துச் சென்று, 'இந்தப் பாரதப் போர் வராம இருக்க என்ன செய்யணும்?'னு கேட்டார்.

அதற்குச் சகாதேவன், 'எதிர்க்கட்சித் தலைவர் கர்ண னுக்கு ஒரு பெரிய பதவி கொடுத்துட்டு, அர்ச்சுனனையும் கொன்று விட வேண்டும். கூந்தலை முடிக்காம இருக்கிற திரௌபதி கூந்தலை அஞ்சு ரூபா கொடுத்து முடி எடுத்துடலாம். பகவானே, அதோடு உங்களுடைய கால் களையும் கட்டி விட வேண்டும்..

'பாராள கர்ணன்-புகழ்
பார்த்தனையும் கொன்று
அணங்கின் கார்குழல் கலைந்து
நின் காலில் தடை பூட்டி...'

'இப்படிச் செய்து விட்டால்... பாரதப் போரைத் தடுத்து விடலாம்...'என்கிறான். ஆச்சரியம் அடைந்த கிருஷ்ண பகவான் சொல்கிறார். 'சகாதேவா, கர்ணனுக்குப் பட்டம் கட்டலாம். அர்ச்சுனனுக்கு ஒரு தூக்க மாத்திரை கொடுத்து கொன்னுடலாம். ஆனா என்னை நீ எப்படிக் கட்டுவாய்?' என்று கிருஷ்ணன் கேட்க, அதற்குச் சகாதேவன்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஸ்வாமி, உன்னுடைய சொரூபத்தைக் காட்டு... அடியேன் கட்டுகிறேன்' என்கிறான்.

'மாயவன் அன்பன் மனமறிவான்
கட்டு நின்ற ஆயவடிவம் பதினாறாயிரம்'

இப்படி, பதினாறாயிரம் கிருஷ்ணர் தோன்றினார். இதற்காக சகாதேவன் பதினாறாயிரம் கயிறா தேடினா ன்...?

பத்மாசனத்தில் அமர்ந்தான். கண்களை மூடினான். அவன் இதயக் கமலத்திலே பகவான் விளங்குகிறார். பக்தி என்ற கயிறு போட்டு, உள்ளக் கோயிலிலே விளங்குகின்ற பகவானுடைய திருவடியைக் கட்டினான். சகாதேவனுடைய கட்டில் கண்ணன் அகப்பட்டுக் கொண்டார். இறுதியில் கண்ணன், 'சகாதேவா, என் கட்டை அவிழ்த்து விடு' என்கிறார்.

அதற்குச் சகாதேவன், 'ஸ்வாமி, பாரதப் போர் நிகழத் தான் போகிறது. அதை இனி யாரால் தடுக்க முடியும்? இந்தப் போரில் தீர்த்துக் கட்ட வேண்டியவர்கள் லிஸ்டில், பாண்டவர்களாகிய எங்களையும் சேர்த்துத்தான் சொல்லியிருக்கிறாய். ஆனால் எங்கள் ஐவரையும் காப்பாற்றுகிறேன் என்று உத்திரவாதம் கொடு' என்று கிருஷ்ண பரமாத்மாவின் காலில் விழுந்து கேட்டான். பகவான் சரியென்று ஒத்துக் கொள்கிறார்.

'சகாதேவா, நமக்குள் நடந்த இரகசிய விஷயம் நம்முடனேயே இருக்கட்டும். இந்த வேத வேதாந்தங்களை வெளியில் சொல்ல வேண்டாம்..' என்று சொல்லி, பாரதப் போரிலே சகாதேவனின் வேண்டுகோளைத்தான் பகவான் நிறைவேற்றுகிறார். எனவே சகாதேவன் என்னை மிகவும் கவர்ந்து நிற்கிறான்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12
திரௌபதி

உலகத்திலேயே பெண் பிறப்புதான் உயர்ந்தது என்று மார்க்கண்டேயர் சொல்கிறார். ஆண்களுக்கு ஆண்டவனை அடைய பல வழிகள்... யோகம், யாத்திரை, ஜபம், தவம், தியானம், அனுஷ்டானம்- இப்படி உண்டு. பெண்ணாகப் பிறந்தவள் கணவனை மட்டும் கடவுளாக எண்ணி

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection. Digitized by eGangotri

இல்லறத்தை நடத்தி விட்டால் தேவரும், மூவரும் அந்தப் பெண்ணைத் தேடிக் கொண்டு செல்வார்கள்.

பெண் குலத்திலேயே, அக்கினியில் பிறந்தவள் திரௌபதி. அழியாத கற்புடையவளாக இருந்ததால்தான், ஐந்து பேரில் யார் இணைகிறார்களோ, அப்பொழுது அவருடைய மாங்கல்யம் மட்டும் கழுத்தில் இருக்கும்... மற்ற மாங்கல்யங்கள் மறைந்து போகும்.

உலகத்தில் எத்தனையோ பெண்மணிகள் தோன்றுகிறார்கள், மறைகிறார்கள். எந்தப் பெண்ணுக்கும் தனியாக ஆலயம் கிடையாது. ஆனால் திரௌபதிக்கு ஆலயம் உண்டு. திரௌபதி, கருணையே வடிவானவள். தினந்தோறும் முப்பதாயிரம் சாதக பிராமணர்களுக்குத் தங்கக் கிண்ணத்திலே அறுசுவை உணவு வழங்கினாள். அத்தோடு, அந்த உணவைப் படைக்க ஓர் அந்தணருக்கு மூன்று பெண்கள் வீதம் நியமித்தாள். சாப்பிடுவது முப்பதாயிரம் பேர்... அதைப் படைக்கிறவங்க தொண்ணூறாயிரம் பேர்!

உண்டி கொடுத்தோரே
உயிர் கொடுத்தோர்...

என்கிறது மணிமேகலை. அப்படிப் புண்ணியம் தேடிக் கொண்ட தர்ம பத்தினியைத் துகில் உரியத் தொடங்கினான் துரியோதனன். பாண்டவர் ஐவரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பதறிப் போன திரௌபதி... ''கோவிந்தா... கோவிந்தா...'' என்று கூவியழைத்தாள். உடனே கிருஷ்ண பரமாத்மா, பத்து லட்சம் புடவைகளைக் கொடுக்கிறார். பெண்கள் கலரை விரும்புவார்கள். அதனால்தான் ருக்மணி கலர், குல்வந்த் கலர், யானை கலர்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஜந்தா கலர்... என்று கலர் கலரான புடவைகளைக் கொடுக்கிறார்!

கற்றை குழல் பிரித்து
கண்ணிலான் பெற்றெடுத்தோன்
பற்றி துகிலுரிய
பாண்டவரும் பார்த்திருந்தார்
கோவிந்தா, நீயன்றி
அன்றைக்கு என் மானம்
ஆரேனும் காத்திருப்பார்!

கற்பின் திறத்தால்தான், அவளின் சாபப்படி துரியோதனன், இடது தொடை துளைக்கப்பட்டு மாண்டான்.

திரௌபதி, எந்த அளவுக்கு அறிவுக் கூர்மையுள்ளவள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. தர்மராஜா சூதாட்டத்தில் தோற்று நிற்கிறார். அப்போது அவள் கேட்கிறாள்...

''என்னைத் தோற்று அவர் தன்னைத் தோற்றாரா?... அல்லது, தன்னைத் தோற்று, என்னைத் தோற்றாரா?.. முதலில் என்னைத் தோற்றிருந்தால், நான் அடிமையாகக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர், தான் தோற்ற பிறகு என்னை வைத்து ஆட உரிமை கிடையாது'' என்று பேசுகிறாள். இது ஒரு சட்ட நுணுக்கம்.

வீட்டை விற்றவன் எப்படி வாடகை கேட்பது?.. வீடே விற்பனையாயிடுச்சே! அது போல, 'அவர் அடிமையான பிறகு என்னை வச்சு ஆட அவருக்கு என்ன உரிமை இருக்கிறது?' என்று கேட்கிறாள்.

இப்படி- அழகிலும், அறிவிலும், கருணையிலும் சிறந்து விளங்கும் மகாபாரதக் காப்பிய நாயகி என்னைப் பெரிதும் கவர்ந்து நிற்கிறாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13

கண்ணன்

கண்ணனை அவதார புருஷன் என்றும், கோபியர் கொஞ்சும் சல்லாபன் என்றும், அவரவர் இஷ்டத்துக்கு, அர்ச்சித்தும், ஆராதித்தும் வருகின்றனர். ஆனால், பாரத காப்பியத்துல கண்ணனை நான் மனிதனாகத்தான் பார்க்கிறேன்.

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

பாரத யுத்தம் வராமல் தடுக்க முதல் முயற்சி எடுத்த வனும் கண்ணன்தான். பிறகு யுத்தம் நடந்தே தீர வேண்டும் என்று, நடத்தி வாழ்க்கையின் தத்துவத்தை விளக்கிக் காட்டியவனும் கண்ணன்தான். பங்காளிகளுக்குள் சண்டை கூடாதென்று, துரியோதனாதிகளிடம் வாதிட்டுப் பார்க் கிறான் கண்ணன். ஆனால், கௌரவர்கள் என்று பெயர் வைத்துக் கொண்டு, அதை இழக்கத் தயாராகிறார்கள் அவர்கள். இந்த சமாதானப் பேச்சுக்குப் புறப்படுவதற்கு முன் கண்ணன், பாண்டவர்களுடன் வெகு நேரம் பேச்சு வார்த்தை நடத்துகிறான். வீரனான பீமன் கூட சண்டை வேண்டாம், சமாதானமாகவே போய் விடுவோம் என்கிறான். ஆனால் திரௌபதிக்கு துரியோதனின் சபையில் ஏற்பட்ட அவமா னத்தை மறக்க முடியாமல், தலை மயிரைக்கையால் பிடித்துக் கொண்டு, ''கண்ண பரமாத்மாவே.. இந்தக் கூந்தல் கற்றையைப் பார்த்துச் செய்ய வேண்டியதைச் செய். தர்ம பிரபுவுக்காகத்தான் மூள்கின்ற கோபத்தீயை பதிமூன்று வருடம் உள் மனதினுள் அடக்கி வைத்தேன். இனி தாங்காது'' என்று திரௌபதி சொன்ன வார்த்தைகள், கண்ணனின் இதயத்தைத் தாக்கி, அவனை மனித நிலைக்குத் தள்ளியது. இந்த ஓர் காரணத்துக்காகத்தான் கண்ணன், பாரதப் போரை ஏற்படுத்தினான். குருட்சேத்திரப் போர் தொடங்குவதற்கு முன், எதிரணியில் கௌரவ துரியோதனாதிகள் நிற்பதைப் பார்த்து, ரத்த பாச உணர்வுடன் பாண்டவர்கள் சபலப்பட, கண்ணன் சொல்கிறான்.

''சத்திரியன் என்பவன், வீர மரணம் அடைவதற்காகவே பிறந்தவன். தர்மத்துக்காக சிலரை தாரை வார்க்க வேண்டும் என்பது சத்திரிய தர்மம். எதிரணியில் இருப்பவர்கள், அண்ணன் தம்பி என்றோ, ஆசான் என்ற எண்ணமோ

In Public Domain. Digitized by Siva Siva Foundation (Chennai)

துளியும் இல்லாமல், அவர்கள் நம்முடைய சத்துருக்கள் என்று நினைத்தே வீழ்த்த வேண்டும். இங்கே உறவு முறைகளுக்கு இடமில்லை. மரணத்தை எண்ணி எவரும் கலங்கிடக் கூடாது'' என்று பாண்டவர்களை எச்சரிக்கிறான். பதிமூன்றாவது நாள் போரிலே அர்ச்சுனனின் மகன் அபிமன்யு, கௌரவர்களால் கொல்லப்படுகிறான். மகனை இழந்த புத்திர சோகத்தோடு அர்ச்சுனன் போர்க்களத்தில் தேரில் அமர்ந்திருக்கிறான். தேரின் மேலே சாரதியாக கண்ணன் நின்று கொண்டிருக்கிறான். வேதனையை வெளிக்காட்டிக் கொண்டால், சத்திரிய குலத்துக்கே அவமானம், கோழைத்தனம் என்று கண்ணன் கடிவான் என்று அர்ச்சுனன், அத்தனை வேதனைகளையும் அடக்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது, மேலே இருந்து சொட்டுச் சொட்டாய்ச் சுடு நீர் அருவி போல் அர்ச்சுனனின் காலில் விழுந்தது. மேலே அண்ணாந்து பார்த்தான் அர்ச்சுனன். அங்கே கண்ணன் அழுகையை அடக்க முடியாமல், கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான். அர்ச்சுனனுக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. உடம்பெல்லாம் சிலிர்க்க, ''மதுசூதனா.. மரணத்தின் தன்மை சொன்ன நீயா கண்ணீர் விடுகிறாய்?.. இவ்வளவு மென்மையான இதயம் உள்ள நீ, எப்படி இந்த குருட்சேத்திரப் போருக்குத் தயாரானாய்?...'' என்று புலம்ப, அதற்குக் கண்ணன், ''தர்மத்தை வெல்ல வைக்க, நான் எதையும் தாங்கவும், எதையும் செய்யவும் சித்தமாக இருக்கிறேன்..'' என்கிறான். இங்கே, வேதம் சொன்ன நாயகனே கலங்கி நிற்கிறான். இங்கேதான் என் மெய்சிலிர்க்க, கண்ணனை மனிதனாகப் பார்க்கிறேன்.

மகாபாரதத்திலே, பகவத்கீதை ஒரு பாகம். இந்த, உலகப்பிரசித்தி பெற்ற கீதோபதேசத்தில் கண்ணன், அவதார

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புருஷனாக நின்று உபதேசித்தாலும், இங்கே மனிதனாகிப் போனது என் மனதைக் கவர்ந்த காட்சி யாகும். இறுதியிலே, வீழ்த்தப்பட்ட துரியோதனன், கண்ணனிடம், 'யுத்த தர்மத்தை மீறியல்லவா எங்களை நாசம் செய்து விட்டாய்...?' என்று குற்றம்சாட்டுகிறான். அதற்குக்கண்ணன், 'காந்தாரி புத்திரனே, நீ செய்த எத்தனையோ பாவங்களைக் கூட மன்னித்து விடலாம். ஆனால், திரௌபதிக்கு நீ செய்த அநியாயத் துக்காக, நான் யுத்த தர்மத்தை மீறியது எந்த விதத்திலும் பாவமாகாது....' என்று கூறிய கண்ணன், எந்த அளவு பராக்கிரமம்புரிந்திருந்தாலும், குருட்சேத்திரத்தில், அபிமன்யு மரணத் துக்காக, கண்ணன் கண்ணீர் விட்டதும், திரௌபதி யின் மானத்துக்கு ஆற்றிய பங்கும்தான் என்னை அதிகம் கவர்ந்து நிற்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



14
பீஷ்மர்

மகாபாரத காப்பியத்தில், பீஷ்மரே கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் குலத்தலைவன். இவர் தன் தகப்பனின் சந்தோஷத்துக்காக, இறுதி வரை பிரம்மச் சாரியாக வாழ்ந்து, கௌரவர்களுக்காகவே உயிரை விட்ட ஒழுக்க வீரன்.

ஹஸ்தினாபுரத்து மன்னன், சந்தனுவின் மனைவி கங்காதேவி, பீஷ்மரைப் பெற்றுக் கொடுத்து விட்டுப்

பிரிந்து போய் விட்டாள். மனைவியை இழந்த தருணத்தில், செம்படவப் பெண் சத்தியவதி மேல் காதல் கொண்டான் சந்தனு. அதற்காக அவள், நாடாளும் மன்னனே மணாளனாகக் கிடைத்து விட்டான் என்று ஓடிப் போய் விடவோ சம்மதித்து விடவோயில்லை. மாறாகத் தன் அப்பனிடம் அனுமதி கேட்கச் சொல்கிறாள்.

அவளின் அப்பனோ, ''இவளிடத்தில் உனக்குப் பிறக்கும் குமாரனை உனக்குப் பின் ராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும்'' என்கிறான். ஆனால் முதல் மனைவியின் மகன் பீஷ்மர் இருக்க வேறு குமாரனுக்கு எப்படி மகுடம் சூட்ட முடியும் என்று சத்தியவதியை மறந்து துக்கத்தில் ஆழ்ந்து விடுகிறான்.

இதை பீஷ்மர் அறிந்து கொண்டு, உடனே செம்படவ ராஜனை சந்தித்து தன் தகப்பனுக்காகப் பெண் கேட்கிறார்.

அதற்கு செம்படவன், ''என் மகளை ராஜ மகிஷியாக்க சம்மதமே. ஆனால் முறையான பட்டாபிஷேகம் உனக்குத் தானே செய்யப்பட்டிருக்கிறது...'' என்கிறான். இதைக் கேட்ட பீஷ்மர், ''என் பட்டாபிஷேகத்தைத் தியாகம் செய்து விட்டேன்.'' என்று, இது வரை ராஜ வம்சங்களில் எந்த காப்பியத்திலும் செய்ய முடியாத ஒன்றை பீஷ்மர் செய்கிறார். இருந்தும், செம்படவத் தலைவன் மற்றொரு நிபந்தனையையும் விதிக்கிறான்.

அதாவது ''உனது மகுடத்தை விட்டுக் கொடுக்கிறாய். பெருமையடைகிறேன். ஆனால் உனக்கு விவாகம் நடந்து, உனக்கும் ஒரு குமாரன் பிறப்பானாகில், அவனும் உலகை வெல்லும் வீரனாகத்தானே இருப்பான்? அவன் தன் வீரத்தால் ராஜ்யத்தை அபகரிக்கத்தானே பார்ப்பான்...?'' என்று செம்படவன் சொல்ல, உடனே பீஷ்மர், ''நான் ஆயுள்

In Public domain. Digitization - Mythili Lakshmi Research Centre

முழுவதும் பிரம்மச்சரிய விரதம் பூண்டு நிற்பேன்'' என்று பிரதிக்ஞை செய்து உறுதிமொழி தந்து, தன் தந்தைக்கு திருமணம் செய்து வைத்து புரட்சி செய்தார் பீஷ்மர்.

அடுத்து,தன் சித்தி சத்தியவதிக்குப் பிறந்த விசித்திர வீரியனான தன் தம்பிக்காக,காசிராஜனின் மகள்களான அம்பை,அம்பிகை, அம்பாலிகை மூன்று பேரையும தன் வீரத்தால் அழைத்து வந்தார். இந்த மூவரில் மூத்தவளான அம்பை, ஏற்கனவே சௌபல தேசத்து அரசன்சால்வனைக் காதலிப்பதாகச் சொன்னதால்,அவளை மட்டும் சால் வனிடம் அனுப்பி வைத்துவிட்டு, மற்ற இருவரையும் விசித்திர வீரியனுக்கு மணம் முடித்து வைக்கிறார்.

அம்பை, சால்வனிடம் செல்கிறாள். அவனோ, ''பீஷ்மர் என்னை ஜெயித்து உன்னை வசப்படுத்தியிருக் கிறார். அதனால் நான் உன்னை ஏற்றுக் கொள்வது வீரமா காது'' என்று அம்பையைத் திருப்பி அனுப்பி விடுகிறான். உடனே பீஷ்மரிடம் விஷயத்தைச் சொன்னாள். பீஷ்மரும், விசித்திர வீரியனிடம், அம்பையையும் ஏற்றுக் கொள்ளச் சொல்கிறார். வேறு ஒருவனைக் காதலித்த ஒரு பெண்ணை நான் ஏற்க மாட்டேன் என்று மறுத்து விடுகிறான். உடனே அம்பை, ''எனக்கு வேறு கதியில்லை. நீயாவது என்னை விவாகம் செய்து கொள்'' என்று பீஷ்மரை வேண்டினாள்.

''என்னுடைய சத்தியத்தை மீற மாட்டேன்'' என்று பீஷ்மர் மறுத்து விடுகிறார். மீண்டும், மீண்டும் வற்புறுத் தியும் பீஷ்மர் மறுக்கவே,அம்பை கோபம் கொண்டு, ''என் வாழ்க்கையைப் பாழாக்கிய பீஷ்மரைக் கொல்ல வேண்டும்'' என்று ஒவ்வொரு தேசத்து மன்னர்களையும் மன்றாடிப் பார்த்தாள். பீஷ்மரின் பராக்கிரமம் அறிந்த எல்லோருமே பயந்து ஒதுங்கி விடுகிறார்கள்.

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

வேறு வழி தெரியாத அம்பை, பீஷ்மரை வீழ்த்துவதே தன்னுடைய பிறவிப் பயன் என்று, பரமசிவனிடம் வரம் பெற்று, வனம் சென்று தவம் செய்து ஆண் தன்மை பெற்று, சிகண்டி என்ற வீரனாக மாறி அர்ச்சுனனுக்குத் தேர்ப் பாகனாகிறாள்.

பாரதப் போர் துவங்குகிறது. பத்தாவது நாள் போரில், பீஷ்மரின் மார்பில் சிகண்டி சரமாரியாக அம்பை செலுத்துகிறான். ஆனால், பீஷ்மர் எதிர்த்து அம்பு செலுத்த வில்லை. காரணம், அம்பை என்ற பெண் ஜென்மம் தான் சிகண்டி என்ற ஆண் வடிவில் தாக்குகிறான் என்று தெரிந்து கொண்டு, பெண்ணை எதிர்த்துப் போரிடுவது சுத்த வீரனுக்கு அழகல்ல என்று தாக்குதல் தாங்க முடியாமல் இருந்த நேரத்தில், அர்ச்சுனனும் தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, இதுதான் சமயம் என்று பீஷ்மரின் மர்ம ஸ்தானங்கள் மீது குறி வைத்துத் தாக்குகிறான்.

பரசுராமரையே பந்தாடிய பீஷ்மர், துரியோதனனுக்கு செய்து கொடுத்த சத்தியத்திற்காக, உடல் முழுவதும் அம்புகள் தைக்க சாய்கிறார்.

அப்படி சாய்கிற போது, அவரது உடல் மண்ணில் படாமல், அத்தனை அம்புகளும் தாங்கி நிற்கின்றன.

பெண் பாவம் சும்மா விடாது என்பது அம்பை (சிகண்டி), பீஷ்மர் பாத்திரங்கள் உணர்த்தினாலும், தந்தைக்காக வாழ்க்கையையும், தன் தம்பியின் வழித் தோன்றல்களுக்காக, தன் உயிரையும் தியாகம் செய்த பீஷ்மரே என் மனத்தைக் கவர்ந்து நிற்கிறார்.

எனவே, நமது இந்து மத காப்பியங்கள், வெறும் கற்பனைகள் அல்ல. ஒவ்வொரு பாத்திரமும் ஒவ் வொன்றை உணர்த்தவே உருவாகி இருக்கிறது!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15
கர்ணன்

மகாபாரதத்தில் எத்தனை எத்தனையோ பாத்திரங்கள் நம் உள்ளத்தைத் தொட்டாலும், அத்தனை பாத்திரங்களிலும் என்னைக் கவர்ந்தவன் கர்ணன்தான்.

இவன் இறப்பதற்குச் சில நாட்கள் முன் வரை, வசுசேனன் என்றே அழைக்கப்பட்டான். குந்தியின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கன்னிப் பருவத்தில், சூரியனுடைய அனுக்கிரகத்தாலே கவச குண்டலத்தோடு பிறந்தவன் கர்ணன். எனவே குலப் பழிக்கு அஞ்சிக் கண்ணீரோடு தண்ணீரில் விட்டு விட்டாள் குந்தி.

என் மகன் ஒரு ஏழையின் கையில் கிடைத்தால் என்ன செய்வது என்று நவரத்னங்களையும் வைத்து, காற்றுப் போகவும் ஏற்பாடு செய்து, மிதக்கிற மாதிரி தக்கை வைத்த பெட்டியோடு கங்கையில் விட்டு விட்டாள். இப்படி பெற்ற தாய், பெற்ற மகனை, பெற்ற அன்றே ஆற்றில் விடுகிறாள்.

திருதராஷ்டிரனுடைய தேர்ப்பாகன் அதிரதன். அவன் மனைவி ராதை கையில் இந்தப் பெட்டி கிடைக்கிறது. குழந்தைச் செல்வம் இல்லாத இந்தத் தம்பதியர் ராதேயன் என்று பெயர் சூட்டி வளர்க்கின்றனர்.

கல்வி நலம் வேண்டுமானால் ஆதித்தனை ஆராதிக்க வேண்டும். ஆஞ்சநேயருக்குக் குரு ஆதித்தன். கர்ணன் ஆதித்தனுடைய மகன். அறிவுக்குப் பஞ்சமா? ஆனாலும் அவன் பரசுராமனிடத்திலே வில்வித்தையைக் கற்றுக் கொள்ள விரும்பினான். பரசுராமன் பீஷ்மரிடம் தோல்வி அடைந்ததினாலே க்ஷத்ரியனுக்குக் கற்றுக் கொடுப்ப தில்லை என்ற நியதி வைத்திருந்தான். ஆனால் வித்தையைக் கற்றுக் கொள்ளும் பொருட்டு, பிராமணன் என்று பொய் சொன்னான் கர்ணன். இந்தப் பொய்யினாலே யாதொரு குற்றமும் இல்லை. பிறரைப் பாதிக்கிற பொய்தான் கொடியது. இப்படிக் கர்ணன் வில் வித்தை களைக் கற்றுக் கொண்டிருந்த காலத்தில், இவன் மிகப் பெரிய வீரனாகி அர்ச்சுனனுக்குத் துன்பம் கொடுப்பான்

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

என்று அர்ச்சுனனின் தந்தையாகிய இந்திரன், பரசுராமருக்கு ஒரு மயக்கத்தைக் கொடுத்து, கர்ணனுடைய தொடையில் தலை வைத்துப் பரசுராமனைத் தூங்கச் செய்தான்.

இந்திரனுடைய ஏவலினாலே, ஒரு கொடிய அரக்கன் வண்டு வடிவமாக வந்து, கர்ணனுடைய தொடையிலே இந்தப் பக்கம் புகுந்து, அந்தப் பக்கமாக வருகிறது. உதிரம் ஆறாக ஓடுகிறது. பரசுராமன் தூக்கம் தெளிந்து பார்த்தால், ரத்த ஆறு. கர்ணன் ஆடாமல், அசையாமல் வாடாமல் உட்கார்ந்து இருந்தான். க்ஷத்ரியன்தான் ரத்தத்தைக் கண்டு ஆஞ்சாமல் நிற்பான். பிராமணனாக இருந்தால் அஞ்சி அஞ்சுமைல் ஓடுவான். அப்பொழுது தான், பரசுராமன், "நீ யார்?" என்று கேட்டான்.

"நான் க்ஷத்ரியன்" என்றான் கர்ணன்.

"நான் சொல்லிக் கொடுத்த வித்தைகளையெல்லாம் சமயம் வரும் போது உனக்கு மறந்து விடக் கடவது"ன்னு சாபம் கொடுத்தான்.

அதனால் வேதனையடைந்த கர்ணன், துரியோ தனிடம் சேர்ந்து துரோணரிடம் வித்தைகளைக் கற்றுக் கொண்டான். துரியோதனன் கர்ணனைத் தமையனாக ஏற்று தழுவிக் கொண்டு அங்கத நாட்டுக்கும் தலைவனாக்கி, சுபாங்கி என்ற பெண்ணையும் மணம் முடித்து வைத்தான்.

கண்ணன் கர்ணனைச் சந்தித்து, "நீ குந்தியின் மூத்த மகன். பாண்டவர்கள் உன் சகோதரர்கள். நீ அவர்கள் பக்கம் வந்து விடு? பரத நாட்டுக்கு உன்னை அரசனாக்குகிறேன்" என்று அழைத்த போது-

இந்த இடத்தில், கண்ணனிடம் கர்ணன் சொல்கிறான். "துரியோதனன் தன் எச்சிலை விழுங்குவதற்கே அரு வெறுப்புக் கொள்பவன். ஆனால், அவன் என் எச்சிலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்டு இருக்கிறான். இந்த உடம்பு துரியோதனன் வளர்த்த உடம்பு. இது அவனுக்கே பயன்பட வேண்டும். ஆகையால் நான் எந்தக் குற்றம் செய்தாலும் செய்வேன்.. செய்நன்றி மறந்த குற்றத்தை மட்டும் செய்ய மாட்டேன்'' என்கிறான்!

அன்றிரவே தாய் குந்தி கர்ணனைச் சந்தித்து, ''மகனே! நீ என் மூத்த மகன். நீ கணை தொடுக்கப் போவது உன் உடன்பிறந்தோர் மீதுதான். எனவே பாண்டவர்கள் பக்கம் வந்து விடு'' என்கிறாள் குந்தி. தன் தாய் குந்தி தேவியிடம், ''தாயே! தாய் சொல் தட்டிய பாவத்திற்குக் கழுவாய் உண்டு. ஆனால், நன்றி மறந்த பாவத்திற்குக் கழுவாய் இல்லை. இன்றொரு கட்சி.. நாளை ஒரு கட்சி என்று மாறுகிறவன் இந்தக் கர்ணன் அல்ல. நான் இறுதி வரை துரியோதனனுக்குத் துணையாக இருப்பேன்'' என்று உறுதியாகச் சொல்லி அனுப்பினான்.

இறுதி வரை அர்ச்சுனனுடைய எந்தப் பாணமும் கர்ணனை நெருங்க முடியவில்லை. வேறு வழியில்லாமல் இந்திரன் பிராமணன் வேடத்தில் வந்து, கர்ணனுடைய தான தர்மங்களையும், உடலோடு ஒட்டிப் பிறந்த கவச குண்டலத்தையும் யாசகமாகப் பெற்றதனால் தான் கர்ணனை வீழ்த்த முடிந்தது. இதை தேவர்கள் நேருக்கு நேர் பார்த்து மலர்கள் தூவி மகிழ்கிறார்கள்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

என்ற வள்ளுவனின் ஒரே ஒரு குறளுக்கு. மகாபாரதத்தில் கர்ணனுடைய ஒரே ஒரு பாத்திரம் மட்டுமே உருவாக்கப் பட்டுள்ளது. எனவே தான் கர்ணன் என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டான்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

16

பீமசேனன்

'நூத்துல அஞ்சு பழுதில்லை'- இது பெரியவங்க சொன்னது. இதுக்கு ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு அர்த்தம் பண்ணிக்குவாங்க. இந்தப் பழமொழி எப்படி வந்த துன்னா, மகாபாரதக் காப்பியத்துல வர்ற திருதராஷ் டிரனுடைய துஷ்டபுத்திரர்கள் நூறு பேரையும் பாண்ட வனுடைய சத்புத்திரர்களான பாண்டவர்கள் ஐவரையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைத்து இந்தத் தத்துவம் உருவானது. அப்ப நூத்துக்கு அஞ்சு பேரு பேராவது நல்லவங்களா இருந்தாங்க. ஆனா இப்ப நூத்துல ஒண்ணுங்கற நிலைமைக்கு வந்துடுச்சு.

ஸ்ரீமத் இராமாயண காப்பியம் உருவாக சீதையை ராவணன் சிறை வைத்ததாலும்... திரௌபதியை துரியோதனன் துகில் உரிந்ததால் மகாபாரத காப்பியமும் உருவானது என்பார்கள்.

ஆனால் இந்த உலக மகா காப்பியங்கள் உருவாகக் கடுகளவு சமாசாரம்தான் காரணமாக இருந்து வருகிறது.

அதுவும் கோலி விளையாடும் பருவத்தில் கேலியாக செய்த செயல்கள் தான், இந்தக் காப்பியங்கள் உருவாகக் கருவாக ஆகியிருக்கிறது.

ராமன் சிறுவனாக இருந்த போது, கூனியின் மீது விளையாட்டாய்க் கல்லை வீச, அது வினையாகிப் போரில் முடிந்தது.

அதைப் போலத்தான் பால்ய வயதில் பாண்டுவின் புத்திரனான பீமசேனன் திருதராஷ்டிரனுடைய புத்திரர்களைக் கிள்ளி விட்டதாலும், கீழே தள்ளி விட்டதாலும், அது துரியோதனனின் நெஞ்சில் விஷமாய் வளர்ந்து பாரதப் போரில் முடிந்தது.

இந்த பாரத காப்பியம் உருவாகக் கடுகளவேனும் காரணமாக இருந்த பீமசேனன் என்னைக் கவர்ந்து நிற்கிறான்.

பாரத யுத்தத்திலே,துரியோதனாதிகள்,அர்ச்சுனனைப் பற்றியோ, தர்மனைப் பற்றியோ, நகுலனைப் பற்றியோ, சகாதேவனைப் பற்றியோ கவலைப் படவில்லை. ஆனால் அவர்கள் அத்தனை பேரும் பீமசேனன் ஒருவனை

மாத்திரமே குறி வைக்கிறார்கள். பீமன் ஒருவனை அழித்து விட்டால், பாண்டவர்களையே ஒழித்தது போல் ஆகி விடும் என்று யுத்தம் தொடங்கிய நாளில் இருந்தே பீமனைத் தீர்த்துக் கட்டவே திட்டம் தீட்டுகின்றனர். அப்படியென்றால் அவன் எவ்வளவு பெரிய வீரன் என்பது விளங்கும்.

அதைவிட, பாண்டவர்களின் தலைமகன் தர்மனே இதைச் சொல்லுகிறான். ஒரு முறை பகாசுரன் என்ற அரக்கனைக் கொல்ல, குந்தி தேவி பீமனை அனுப்பி விடுகிறாள். இதை அறிந்த தர்மன் தன் தாயிடம், ''என்ன காரியம் செய்து விட்டீர்கள்...? நாங்கள் பீமனின் பலத்தை நம்பித்தானே நிம்மதியாக இருக்கிறோம். அவனைப் போய் கொடிய அரக்கனிடம் அனுப்பி விட்டீர்களே...'' என்று கடிந்து கொள்கிறான்.

அப்படிப்பட்ட பீமன், இளம் வயதில் ஹஸ்தினாபுரத்தில், துரியோதனாதிகளுடன் விளையாடிக் கொண்டிருந்த போது, தன்னுடைய தேக பலத்தால், எல்லோரையும் தலைமயிரைப் பிடித்து இழுத்தும், அடித்தும் காயப் படுத்தியிருக்கிறான்.

அந்தக் காயமே, துரியோதனாதிகளின் நெஞ்சில் வஞ்சம் வளர்த்து, வயது வந்த பிறகு பீமனைத் தீர்த்துக் கட்ட உணவில் விஷம் கலக்க வைக்கிறது. பீமன் பிழைத்துக் கொள்கிறான்.

இப்படி வளர்ந்த விரோதமே இறுதியில் குருக்ஷேத்திரத்தில் முடிகிறது.

இந்தப் பீமன் கதாபாத்திரத்தை நினைத்தாலே எனக்கு விளையாட்டு வினையாகும் தத்துவத்தையே பீமன் உணர்த்துவதாகத் தோன்றும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அள்ள அள்ளக் குறையாத ஞான வள்ளல்
திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்
சொல்லச் சொல்ல எழுதிய - இந்தச் சொல்
அமுதக் காவியத்தை - உங்கள்
கரங்களுக்கு காணிக்கையாக்குகிறேன்.

– மனவை பொன்.மாணிக்கம்



இது ஒரு கற்பகம் புத்தகாலயம் வெளியீடு

KR 235